DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 150/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கவிசெல்வி (மருத்துவர்) (P.w.5)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of January 2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருச்சுழி அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 07.10.2021ம் தேதியன்று மதியம் 1.15 மணியளவில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மேலகுருணைகுளம் முனியாண்டி மகன் 65 வயது உள்ள சாத்தன் என்பவர் தன்னை தெரிந்த முன்று நபர்கள் கல்லால் சுமார் 12.30மணியளவில் வீட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு இடது பக்க முன் தலையில் சிதைந்த காயம்

1 x 0.5x0.5 செமீ அளவில் காணப்பட்டது. அவருக்கு இரண்டு தையல் போடப்பட்டது. அவர் சுயநினைவுடன் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். 09.10.2021ம் தேதி மதியம் 12.00மணியளவில் அவர் தலை வலிக்காக சிடி ஸ்கேன் எடுப்பதற்காகவும் மேல்சிகிச்சைக்காகவும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று அங்கு உள்ள மருத்துவர் சான்றின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**அந்த காயச்சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேலும் இதே வழக்கில் தொடர்புடைய மேலக்குருணைக்குளத்தைச் சேர்ந்த இருளாண்டி மகள் 36 வயது உள்ள குருவம்மாள் என்பவர் அன்றே 1.15மணிக்கு சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் 12.30மணியளவில் வீட்டில் வைத்து சைக்கிள் செயினால் அடித்தும், கடித்தும் தாக்கியதாக கூறினார். அவருக்கு வலது கை மணிக்கட்டில் 0.5x0.5 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவர் சுயநினைவுடன் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**அந்த காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

சாத்தனுக்குஏற்பட்ட காயமானது தாழ்வான ஓட்டின் தாவாரத்தில் முட்டினாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர் ஒரு நபரின் உதவியால்தான் மருத்துவமனைக்கு வரமுடியும் என்றால் இல்லை.

குருவம்மாளுக்கு ஏற்பட்ட காயம் வீட்டின் சுவற்றில் உரசும்போதும்கூட சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.